மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அரசு பாலிடெக்னிக்குகளிலும் ஷிப்ட் முறையைக் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அது குறித்து அரசு பரிசிலித்துக் கொண்டிருக்கிறது. நீலகிரி பாலிடெக்னிக்கைப் பொறுத்தவரையில், அது புதிதாகத் துவங்கப்பட்டிருக்கிற காரணத்தால், அங்கே எல்லாவிதமான வசதிகளும் பூர்த்தி செய்யப்பட்ட பிறகு, இதைப்பற்றி யோசிக்கலாம்.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவர் அவர்களே, ஷிப்டு முறையை இந்தக் கல்வி ஆண்டிலிருந்து பல் தொழில் பயிலகங்கள் நடைமுறைப்படுத்துவதால், அங்கே போதிய அளவுக்கு ஆசிரியர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தற்போது இருக்கிற ஆசிரியர்களை வைத்தே ஷிப்ட் முறையைத் துவங்குவது என்று முடிவு செய்திருக்கிறோம். அந்த ஆசிரியர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்ட பிறகுதான் அவர்கள் இதற்கான விண்ணப்பத்தை அனுப்பவேண்டும் என்றும் அதன் பிறகுதான் அரசு அதைப் பரிசீலிக்கும் என்றும் சொல்லியிருக்கிறோம். எனவே ஆசிரியர்கள் எதிர்ப்பார்களானால், நாம் இதைக் கொண்டுவர முடியாது.

பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளில் கழிப்பிட வசதிகள்.

* 85. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. செ. முத்துசாமி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தருமபுரி மாவட்டத்தில், அரூர், பென்னாகரம் பெண்கள் உயர்நிலைப்பள்ளிகள் உள்ளிட்டு, 90 சதவிகிதம் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியைகட்கும், பள்ளிச் சிறுமிகட்கும் கழிப்பிடங்கள் ஏதுமின்றி அவலமான நிலையில் உள்ளன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இக்குறைபாடுகளைக் களைய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) & (இ) தருமபுரி மாவட்டத்தில் உள்ள 9 அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளிகளில் உலர் முறை கழிப்பிட (Dry Latrines) வசதிகள் ஓரளவு உள்ளன என்றும் ஆனால் இவை எதும் அவலமான நிலையில் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசு உயர்நிலைப்பள்ளிகளில் கழிப்பிட வசதிகளைச் சீர் செய்வதற்கு இவ்

1984 மார்ச் 13]

வாண்டு (1982-83) அரசு 1.50 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. இது சார்ந்து இன்னும் நிதியொதுக்க அரசு முடிவெடுக்கும்போது தருமபுரி மாவட்டத்திலுள்ள பள்ளிகளின் நிலையும் கருத்திற்கொள்ளப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : இது போன்ற கழிப்பிடங்கள் அதிகம் தேவைப்படுகின்றன. ஒருவேளை நிதி வசதி இல்லாத நிலை இருக்குமானால், மாநகராட்சி கட்டுகின்ற கழிப்பிடங்களை பள்ளிகளுக்கு அருகிலோ அல்லது பள்ளிக்குள்ளே இட வசதி இருக்குமானால் அங்கேயும் கட்டித்தந்து வசதி செய்கிற எண்ணம் அரசுக்கு உண்டா? சுத்தம் செய்யும் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாநகராட்சிப் பள்ளிகளைப் பொறுத்த வரையில், மாநகராட்சி தன்னுடைய கவனத்தைச் செலுத்துமென்று நம்புகிறேன். கிராமப்புறங்களில் உள்ள மகளிர் பள்ளிகளைப் பொறுத்தது இங்கேயுள்ள கேள்வி. எங்கெனவே ஓரளவிற்கு உள்ளன என்றாலும், நல்ல முறையில் கட்டித் தருவதற்காக ரூபாய் 1.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ரொம்ப மோசமான நிலையில் உள்ள பள்ளிகளுக்கு முன்னுரிமை கொடுத்து அதற்காக பணத்தை ஒதுக்கி இந்த வசதியைச் செய்ய நாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். சுத்தம் செய்கின்ற வேலைகளை உள்ளாட்சி மன்றங்களைச் சார்ந்தவர்கள் பார்க்க வேண்டும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : கழிப்பிடங்களைச் சுத்தம் செய்யும் பணியாளர்களுடைய ஊதியம் குறைவாக இருப்பதாலும், அதிக ஆட்கள் இல்லை என்பதாலும், சரிவர அதை நிர்வகிக்க முடியாத நிலை இருக்கிறது என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனியாகக் கேள்வி போட்டால், விவரங்களைத் திரட்டி பதில் சொல்லலாம்.